செய்தி வெளியீடு எண்: 579 நாள் : 12.12.2016

# செய்தி வெளியீடு

**வெள்ளம் வடிந்த பின்பு – செய்ய வேண்டியவையும் / செய்யக்கூடாதவையும்**

- பாதுகாப்பானநிலை திரும்பும்வரை வெள்ளம் வடிந்தப்பகுதிக்கு செல்ல வேண்டாம்.
- வெள்ளநீர் வடிந்த பின்னரும் ஆற்றங்கரைக்கு அருகில் செல்வதை தவிர்க்கவும்.
- வெள்ளம் புகுந்த கட்டிடத்திற்குள் செல்லும் முன் அதன் பாதுகாப்பை உறுதி செய்யவும், கட்டிடத்தை சுற்றி வெள்ளநீர் இருந்தாலோ அல்லது கட்டிடத்திற்குள் வெள்ளநீர் இருந்தாலோ, உள்ளே நுழையக் கூடாது.
- வெள்ளத்திற்கு பின்பு கட்டிடத்திற்குள் நுழையும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.
- கட்டிட கட்டமைப்பில் விரிசல் மற்றும் சேதம் உள்ளதா என பரிசோதிக்கவும். அனைத்து சுவர்கள், தரைப் பகுதி, மேற்கூரை கதவு மற்றும் ஜன்னல்களை ஆய்வு செய்யவும்,. இதனால் கட்டிடம் இடிந்து விழுவதற்கான வாய்ப்பை முன்கூட்டியே அறிந்து, அதனால் ஏற்படும் ஆபத்தையும் அறிந்து செயல்படலாம்.
- கட்டிடத்திற்குள் உள்ள மின் இணைப்புகள், தரையிலிருக்கும் அடுப்புகள் கொதிகலன்கள் (Boilers), எரிவாயு சிலிண்டர் மற்றும் மோட்டார் பம்பு போன்ற இதர மின் உபகரணங்களை முறையாக சோதனை செய்ய வேண்டும்.
- வடிகால் அமைப்பில் உடைப்பு ஏற்பட்டு இருக்குமாயின் கழிப்பறை மற்றும் குழாய் தண்ணீர் உபயோகத்தை நிறுத்தி விடவும்.
- கழிவுநீர் குழாயமைப்பில் சேதம் ஏற்பட்டிருந்தால், உடனடியாக சரிசெய்வதன் மூலம் நோய் பரவுவதை தவிர்க்கலாம்.
- வெள்ள நீரோடு கொடிய பூச்சிகள் மற்றும் விஷப் பாம்புகளும் வீட்டிற்குள் புகுந்திருக்கலாம் என்பதால் கவனமாக இருக்கவும்
- வெள்ளநீரில் நனைந்த மருந்துகள், உணவு மற்றும் தண்ணீர் (அது அடைக்கப்பட்ட பண்டங்கள்) போன்றவற்றை பயன்படுத்த வேண்டாம்.
- மின் உபகரணங்களில் சேதம் ஏற்பட்டிருந்தால் மின் இணைப்பை உடன் துண்டிக்கவும்
- கொதிக்க வைத்து, குளோரின் கலந்த பாதுகாப்பான தண்ணீரையே பருகவும்.
- பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பான பாதைகளையே உபயோகிக்கவும், வேடிக்கை பார்ப்பதை தவிர்க்கவும்
- வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்ட சாலைகள், மண்சரிவுகள், கீழே விழுந்த மரங்கள் மற்றும் அறுந்து விழுந்த மின் இணைப்புகளை கவனத்தில் கொள்ளவும்.
- தாழ்வான மின் கம்பிகள் அருகே செல்லக் கூடாது.
- உறுதியான காலணிகள் அணிந்து, வெட்டுக் காயங்களிலிருந்து கால்களைப் பாதுகாக்கவும்.

- சேதமடைந்த குடிநீர் குழாய் வடிகால் அமைப்பு மற்றும் மின் இணைப்பு குறித்து, உரிய அதிகாரிகளிடம் உடன் புகார் செய்யவும்.
- கட்டிடத்திற்குள் வெளி காற்று புகுமாறு செய்தும், நச்சு வாயுகள் மற்றும் துர்நாற்றாத்தை போக்கவும்
- சேதமுற்ற கட்டிடம் மற்றும் அதன் அனைத்துப் பகுதிகளையும் புகைப்படம் எடுக்கவும். (காப்பீடு இருப்பின் பெறுவதற்கு உதவும்)
- சிறிய காயங்களையோ, நோய் அறிகுறிகளையோ அலட்சியப்படுத்தக்கூடாது தேவையான மருத்துவ உதவியை உடனடியாக நாடவும்.
- எரிவாயு இணைப்பு அணைக்கப்பட்டு இருக்குமாயின் மீண்டும் அடுப்பு பற்றவைக்கும் முன் அதிக கவனம் தேவை
- வெள்ளப்பகுதியில் குழந்தைகள் விளையாடுவதை தடைசெய்ய வேண்டும்.
- வெள்ளநீரில் நனைந்த அனைத்துப் பொருட்களையும் சுத்தப்படுத்தியும் தேவை எனில் கிருமி நீக்கியும் பயன்படுத்தவும்.
- பொருள்களை பழுது நீக்கம் செய்யும் போது எதிர்காலத்தில் ஏற்படும் வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளவும்.
- உள்ளூர் கட்டிட விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றவும்.
- கட்டுமானத்தின் போது வெள்ளத்தை தாங்கும் திறன் கொண்ட உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை உபயோகிக்கவும்.
- மின் உபகரணங்களை, சாத்தியமான வெள்ளம் பாதிக்கும் வாய்ப்புள்ள உயரத்திற்கு மேலாக பொருத்தி வைக்கவும்.
- எதிர்பார்க்கப்படும் வெள்ளம் பாதிக்க வாய்ப்புள்ள உயரத்திற்கு மேல் வீட்டு மின் உபகரணங்களை பொருத்தி வைக்கவும் .
- கட்டிடத்தில் முழுமையான பாதுகாப்பு நிலையினை உறுதி செய்யவும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**